தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (6.6.2023) முகாம் அலுவலகத்தில், IPL – 2023 கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வெற்றி பெற்றதையொட்டி அக்கோப்பையை இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் என். சீனிவாசன், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் முழு நேர இயக்குநர் திருமதி ரூபா குருநாத் ஆகியோர் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை சூப்பர் கிங்ஸ் கிரிக்கெட் லிமிடெட் தலைமை செயல் அலுவலர் காசி விஸ்வநாதன், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் பெருநிறுவன விவகார அலுவலர் கே. எஸ். பாலாஜி, கோபிநாத் ஆகியோர் உடனிருந்தனர்.

முதல்வரின் வெளிநாட்டுப் பயணத்தை இழிவுபடுத்தி

ஆளுநர் ரவி ஆலகால விஷத்தைக் கக்கி உள்ளார்!

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடும் கண்டனம்!

சென்னை, ஜூன் 8 - ‘‘முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வெளிநாட்டு பயணத்தை இழிவு படுத்தி ஆளுநர் ரவி ஆலகால விஷத்தைக் கக்கியுள்ளார்” என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

உதகையில் நடைபெற்ற பல்கலைக் கழக துணை வேந்தர்கள் மாநாட்டில் ஆளுநர் ஆர். என்.ரவி கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் பேசிய ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழ்நாட்டுக்கு இணையான முதலீடுகளை ஹரியானா மாநிலம் ஈர்த்து வருகிறது. நாம் கேட்பதாலோ, நேரில் சென்று தொழிலதிபர்களுடன் பேசுவதாலோ முதலீடுகள் வராது. முதலீடுகளை ஈர்க்கத் திறமையான மற்றும் பொருத்தமான மனித ஆற்றலை உருவாக்குவதே சிறந்த வழியாக இருக்கும். உலகளாவிய பெரும் தொழில் அமைப்புகளுக்கான சிறந்த சூழலை உருவாக்க வேண்டும்” என்று பேசியுள்ளார்.

சிங்கப்பூர், ஜப்பானுக்கு 9 நாள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டுவிட்டுத் திரும்பி இருக்கிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்தப் பயணத்தில் ஐ.பி. நிறுவனம், டைசல் நிறுவனம், ஹோம்ரான் ஹெல்த்கேர் நிறுவனங்கள் உள்ளிட்ட வற்றுடன் ரூ.3,233 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தமிழக முதல்வர் சொல்லி இருக்கிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வெளிநாட்டுப் பயணத்தை இழிவுப்படுத்தி ஆளுநர் ஆர்.என்.ரவி ஆலகால விஷத்தைக் கக்கி இருக்கிறார். ஆளுநரின் பேச்சும் செயல்பாடுகளும் எல்லை மீறி போய் கொண்டு இருப்பது கடும் கண்டனத்திற்கு உரியது.

தமிழ்நாட்டின் முதல் விரோதியாக விளங்கும் ஆளுநர் ஆர்.என்.ரவியை வெளி யேற்ற வேண்டும். இல்லையேல் நாகலாந்து மாநிலத்தில் மக்கள் விரட்டி அடித்தது போல தமிழ்நாட்டிலும் நடக்கும்.

இவ்வாறு வைகோ தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

ஒடிசா ரயில் விபத்து: தமிழ்நாட்டைச் சேர்ந்த

தேசிய பேரிடர் மீட்புப் படை வீரருக்கு வாழ்த்து!

முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை. ஜூன் 8 - ‘‘ஒடிசா ரயில் விபத்தில் பல உயிர்களைக் காப்பாற்றிய தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய பேரிடர் மீட்புப்படை வீரர் வெங்கடேசனை வாழ்த்துகிறேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:-

ஒடிசா இரயில் விபத்தில் பல உயிர்களைக் காப்பாற்றக் காரணமாக இருந்துள்ளார் தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய பேரிடர் மீட்புப் படை வீரர் வெங்கடேசன் அவர்கள்.

உரிய நேரத்தில் அவர் உயரதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்து, அருகிலிருக்கும் தேசிய பேரிடர் மேலாண்மைப் படையினர் விரைந்து வந்ததினால் எத்தனையோ உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

மிக அதிர்ச்சிகரமான நேரத்தில் தெளிவாகவும் விரைவாகவும் செயல்பட்ட அவரைப் பாராட்டுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பொய் வழக்கு!

பூண்டி கலைவாணன்- கழக நிர்வாகிகள் நீதிமன்றத்தில் ஆஜர்!

திருவாரூர், ஜூன் 8 - விவசாய விரோத ஒன்றிய பி.ஜே.பி. அரசையும், அதற்கு ஆதரவாக செயல்பட்டு விவசாயிகளை வஞ்சித்த அ.தி.மு.க. அரசையும் கண்டித்து ஜனநாயக முறைப்படி 2021 ம் ஆண்டு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மீது புனையப்பட்ட வழக்கில் பூண்டி கே.கலைவாணன் உள்ளிட்ட அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

ஒன்றிய பி.ஜே.பி. அரசு விவசாயத்தை பாழ்படுத்தும் நோக்கத்தில் கொண்டு வந்த வேளாண் சட்டத்திருத்த மசோதாவை திரும்பப்பெறக்கோரி, டெல்லியில் விவசாயிகளின் பிரமாண்ட போராட்டம் நடைபெற்றது. அப்போது தமிழகத்தில் ஆட்சியில் இருந்த அ.தி.மு.க. ஆட்சிதங்களின் பதவியை தக்கவைத்துக் கொள்ள அந்த வேளாண் சட்ட திருத்த மசோதாவை கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்தது.

ஆனால் விவசாயத்தின் மீது என்றும் அக்கறை கொண்டிருக்கும் தி.மு.க. தலைவர் தளபதி அவர்கள் டெல்லியில் விவசாய போராட்டத்திற்கு தனது ஆதரவினை தெரிவித்து விவசாயிகளுக்கு ஆதரவாக குரல்கொடுத்தார், அப்போது 21.06.2021 அன்று திருவாரூரில் விவசாயிகளுக்கு ஆதரவாக ஜனநாயக முறைப்படி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், மாவட்ட பொருளாளர் மு.வெங்கடேசன், கொரடாச்சேரி பேரூர் செயலாளர் பூண்டி கலைவேந்தன், பாரதி, ஹரி, சி.பி.ஐ. நிர்வாகிகள் மாசிலாமணி, சிவபுண்ணியம், காங்கிரஸ் நிர்வாகி எஸ்.எம்.துரைவேலன், உள்ளிட்ட 14பேர் மீது அப்போதைய அ.தி.மு.க. அரசின் காவல்துறை வழக்கு புனைந்தது.

இந்த வழக்கினை சட்ட முறைப்படி தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் எதிர்கொண்டுவந்த நிலையில், திருவாரூர் நீதித்துறை நடுவர்மன்றத்தில் நடைபெற்ற இந்த வழக்கானது, திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இந்நிலையில் 06.06.2023 அன்று நடைபெற்ற இந்த வழக்கின் விசாரணைக்கு பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட அனைவரும் ஆஜராகினர். அப்போது மாவட்ட அமர்வு நீதிபதி அவர்கள் வரும் 04.07.2023 தேதிக்கு விசாரணையை ஒத்தி வைத்தார்.

இந்த வழக்கில் தி.மு.க. வழக்கறிஞர்கள் அசோக்குமார், விவேகானந்தம், விநாயகமூர்த்தி ஆகியோர் ஆஜராகி வாதாடி வருகின்றனர். இந்த வழக்கில் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளரும் வழக்கறிஞர் உதவியாளருமான ராஜ் என்கிற கருணாநிதியும் தேவையான பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக

பேருந்துகளில் இருக்கைகள் முன்பதிவு அதிகரிப்பு!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, ஜூன் 8 - தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் 7.6.2023 முதல் இருக்கைகள் முன்பதிவு செய்வது அதிகப்படுத்தியது குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அளித்த தகவல் வருமாறு :-

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தொலைதூரப் பயணிகளின் வசதிக்காக தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களுக்கு பேருந்துகளை இயக்கி வருகிறது. இதில் பயணிகளின் பாதுகாப்பிற்கும் மற்றும் வசதியான பயணத்திற்காகவும் ஒரு மாதத்திற்கு முன் இருக்கைகளை இணையதளம் மற்றும் கைபேசி மூலம் முன்பதிவு செய்து கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் தினசரி சுமார் 60,000 பயணிகளில் 20,000 பயணிகள் வரை முன்பதிவு செய்து பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இந்த வசதியினை அரசு பேருந்துகளில் 200 கி.மீ. தூரத்தில் பயணிக்கும் பயணிகளுக்காக விரிவு படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் போன்ற முக்கிய நகரங்களில் இருந்து பயணிக்கும் பயணிகளின் வசதிக்காக முன்பதிவு சேவை விரிவுப்படுத்தப் படுகிறது.

இதன்காரணமாக தற்போது ஒரு நாளைக்கான முன்பதிவு செய்து பயணிக்கும் வசதி 51,046 இருக்கைகளிலிருந்து 62,464 இருக்கைகள் வரை அதிகப்படுத்தி கூடுதல் பயணிகள் பயணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது

இதனடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நகரங்களிலிருந்து இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தை தவிர்த்து பிற தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் முன்பதிவு செய்து பயணிக்க இயலும். மேலும், பயணிகள் வழக்கமாக பயன்படுத்தும் முன்பதிவு தளமான tnstc.in மற்றும் tnstc mobile app மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம். இந்த வசதி 07.06.2023 முதல் நடைமுறைப்படுத்தபடவுள்ளது. இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா தொடக்கம்!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!

2023 ஜூன் 10	- அரியலூர்
11	- பெரம்பலூர்
17	- மதுராந்தகம். காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்
20	- திருவாரூர்
21	- திருபுவனம் - தஞ்சை வடக்கு மாவட்டம்
22	- கும்பகோணம்
23	- அம்மாபேட்டை
24	- வேலூர் - வேலூர் மாவட்டம்
ஜூலை 1	- தென்காசி தெற்கு மாவட்டம்
2	- தென்காசி தெற்கு மாவட்டம்
3 காலை	- திருநெல்வேலி மாநகரம்
3 மாலை	- தென்காசி வடக்கு மாவட்டம்
4	- தென்காசி வடக்கு மாவட்டம்
6	- பட்டுக்கோட்டை - தஞ்சை தெற்கு மாவட்டம்
7 காலை	- அம்மாபேட்டை - திருமணம்
7 மாலை	- புதுக்கோட்டை - பொதுக்கூட்டம்

திருவிடைமருதூர் பேரூர் கழகச் செயலாளர்

சுந்தரஜெயபால் தாயார் அம்சவள்ளி அம்மாள் மறைவு!

சு.கல்யாணசுந்தரம் எம்.பி. - முனைவர் கோவி. செழியன் அஞ்சலி!

தஞ்சாவூர், ஜூன் 8 - தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடை மருதூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் செ.சுந்தரமூர்த்தி மனைவியும், திருவிடை மருதூர் பேரூராட்சி துணைத் தலைவரும், பேரூர் தி.மு.க. செயலாளருமான சுந்தரஜெயபால் தாயாரும், திருவிடை மருதூர் பேரூராட்சி மன்றத் தலைவர் புனிதாஜெயபால் மாமியாருமான சு.அம்சவள்ளி அம்மாள் (95 வயது) முதிர்வின் காரணமாக நேற்று (07.06.2023 - புதன்கிழமை) அதிகாலை 03.00 மணிக்கு மறைவெய்

தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அம்மையாரின் மறைவுச் செய்தியறிந்ததும் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன், கும்பகோணம் மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், ஒன்றியக் கழகச் செயலாளர் கோ.க.அண்ணாதுரை, மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு. உத்திராபதி மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

அம்மையாரின் இறுதி ஊர்வலம் நேற்று 07.06.2023 மாலை 03.00 மணியளவில் திருவிடை மருதூர், வடக்கு வீதியில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் விஷ சாராயம் குடித்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியவர்களுக்கு முதலமைச்சரின் உத்தரவுக்கிணங்க முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 50 ஆயிரத்திற்கான காசோலையை சிறுபான்மையினர்நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.உடன் விழுப்புரம் மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி ,மரக்காணம் ஒன்றிய சேர்மன் தயாளன், பேரூராட்சி மன்ற தலைவர் வேதநாயகி ஆளவந்தார், வட்டாட்சியர் பாலமுருகன் உள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ். குரலில் மிமிக்ரி செய்யும் ஆளுநர் ஆர்.என்.ரவி!

மாநிலங்கள் எதன் அடிப்படையில் அமைய வேண்டும் என்பது குறித்து நீண்ட நெடிய விவாதங்கள் நடைபெற்றுள்ளன. மொழி வழியில் தான் மாநிலங்கள் அமைய வேண்டும் என்ற கருத்தோட்டத்தை முன்னுக்குப் பின் முரணின்றி முன்வைத்தது இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம். அகண்ட பாரத ஆசையில் உழன்று கொண்டிருந்த ஆர்.எஸ்.எஸ். இயக்கம் மொழி வழி மாநிலம் என்ற கண்ணோட்டத்தையே ஏற்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், மாநிலங்கள் என்பதேகூட ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு எட்டிக்காயாய் கசந்தது. அதிகாரங்கள் அனைத்தும் குவிக்கப்பட்ட மைய அரசு என்பதே அவர்களது விருப்பம்.

இந்தியாவை நூறு பகுதிகளாகப் பிரித்து அவை யாவும் தில்லியின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்றே ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்க்கர் கூறி வந்தார். மொழிவழி மாநிலங்கள் பிராந்தியவாதத்தை வளர்க்கும் என்றும், அபாயகரமான பிரிவினைக்கு வழி வகுத்துவிடும் என்றும் கோல்வால்க்கர் கும்மியடித் தார். மாவட்டங்களை இணைத்து ‘ஜனபாத’ அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்பதே கோல்வால்க் கரின் கருத்து. ஜனசங்கத்தின் பொதுச் செயலாளரான தீனதயாள் உபாத்யாயா, நூற்றுக்கும் மேற்பட்ட ஜனபாத அமைப்புகளை உருவாக்கி, மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும். மொழிவழி மாநிலங்களை முற்றாக அழிக்க வேண்டும் என்றார். காலாவதியான இந்த கருத்துக்கு ஆளுநர் ரவி இப்போது புகை போட்டு பூஜை நடத்துகிறார்.

தெலுங்கானா மாநிலம் உருவான நாள் ஜூன் 2 ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நாளில் நடை பெற்ற விழாவில் பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி, “ஆட்சி செய்வதற்கு உதவும் என்பதால்தான் மாநிலங்கள் உரு வாக்கப்பட்டன. மலையாளிகள், தமிழர்கள், பீகாரிகள் என்று அழைக்கப்படுவது இந்தியா என்ற ஒற்றைச் சிந்தனைக்கு எதிராக உள்ளது” என்று உளறி யிருக்கிறார்.

மாநிலங்களுக்கான தனி அடையாளம் மக்களைப் பிரிக்கும் மனநிலையில் உருவாக்கப்படுகிறது. ஒரே பாரதம் என்ற கொள்கைக்கு இது எதிரானது. இந்தி யர்களாக ஒன்றுபடும் நோக்கத்தை இது வலுவிழக்கச் செய்கிறது என்றெல்லாம் பேசிச் சென்ற அவர், சிவன், ராமர், கிருஷ்ணா, பெண் கடவுள்கள் ஆகியவை ஒன்றாக உள்ளது. மொழி, உணவு என்று நாம் வேறு பட்டாலும், கலாச்சாரத்தால் ஒன்றுபடுகிறோம். மாநிலத்தில் கலாச்சாரம் என எதுவும் இல்லை. தமிழர்கள், தெலுங்கர்கள் போன்ற அரசியல் அடையாளங்களை மொழிவழி மாநிலங்கள் உருவாக்கியுள்ளன. இது போன்ற கற்பனை அடையாளங்கள் நாட்டின் வலிமை யைக் குறைக்கிறது என்று பேசியுள்ளார்.

இந்தியா விடுதலைப் பெறுவதற்கு முன்பே நீண்ட போராட்டத்தின் பலனாக 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி ஓரிய மொழிப் பேசும் மக்களுக்காக தனி மாநிலம் பிறந்தது. காங்கிரஸ் தலைவரான பொட்டி ஸ்ரீராமுலு, ராயலசீமா, கடலோர ஆந்திரப் பகுதிகளை இணைத்து ஆந்திரப் பிரதேச மாநிலத்தை உருவாக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். அன்றைய ஒன்றிய அரசு இதை ஏற்க மறுத்ததால், 1952 ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் தேதி சென்னையில் உண்ணாநோன்பினைத் துவக்கினார். தொடர் உண்ணாவிரதத்தால் 1952 டிசம்பர் 15 ஆம் தேதி மொழிவழி ஆந்திர மாநிலத்திற்காக உயிர்த்தியாகம் செய்தார். அவரது இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்தப் பின்னணியில்தான் 1952 டிசம்பர் 19 ஆம் தேதி பிரதமர் நேரு, தெலுங்கு பேசும் மக்களுக்கு தனி மாநிலம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார். 1953 அக்டோபர் 1 ஆம் தேதி சென்னை ராஜதானியிலிருந்து பிரிக்கப்பட்டு ஆந்திர மாநிலம் உருவானது.

இப்போது பொட்டி ஸ்ரீராமுலுவின் உயிர்த்தியாகத்தை ஆளுநர் ஆர்.என்.ரவி கொச்சைப்

- மதுக்கூர் ராமலிங்கம்

படுத்தி யிருக்கிறார். சில மாதங்களுக்கு முன்பு தமிழ்நாடு என்று அழைக்கக் கூடாது. தமிழகம் என்றுதான் அழைக்க வேண்டும் என ஆளுநர் ரவி வம்பு வளர்க்க, பல திசைகளிலிருந்தும் வந்து குவிந்த அம்பு களால் நொந்து போன அவர், நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை என அசடு வழிந்தார். தமிழ்நாடு என்கிற பெயர் மாற்றத்தின் பின்னணியில், விருது நகர் தியாகி சங்கரலிங்கனாரின் உயிர்த் தியாகம் உள்ளது. தமிழ்நாடு தீர்மானத்தை மாநிலங்களவை யில் கொண்டு வந்தவர் தமிழ்நாடு பொதுவுடமை இயக்கத் தலைவர் தோழர் பி.இராமமூர்த்தி. தீர்மானம் விவாதத்திற்கு வந்த போது, அவர் சிறையிலிருந்ததால், வங்க கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர் தோழர் பூபேஷ் குப்தா இதை முன்மொழிந்து பேசினார். அப்போது, மாநிலங்களவை உறுப்பினராக இருந்த அண்ணா, இதை ஆதரித்து உரையாற்றினார். பிறகு, 1967இல் அண்ணா முதல்வரான நிலையில், சென்னை ராஜ தானியின் பெயர் தமிழ்நாடு என்று மாற்றப்பட்டது. அதேபோல, கேரள மாநில உருவாக்கத்தில் முன்னி ன்று முதன்மை பணியாற்றியவர்கள் தோழர்கள் இ.எம்.எஸ்., ஏ.கே.கோபாலன் போன்ற தலைவர்கள். மராட்டிய மொழி அடிப்படையிலான சம்யுக்த மகாராஷ்டிரம், மலையாள மொழி அடிப்படையிலான ஐக்கிய கேரளம், தெலுங்கு மொழி அடிப்படையிலான விசால ஆந்திரம், தமிழ் மொழி அடிப்படையிலான தமிழ்நாடு என்ற கோரிக்கைகளை உரத்த குரலில் முழங்கிய வர்கள் கம்யூனிஸ்டுகள். இது மொழிவழி உணர்வுகளை அங்கீகரித்து அதே நேரத்தில் இந்திய ஒருமைப்பாட்டின் வேருக்கு நீர்ப் பாய்ச்சுகிற உயரிய கோட்பாடாகும்.

பழைய மன்னராட்சி கால கனவில் இருந்த சனாதனிகள், மொழிவழி மாநிலங்களுக்காக ஒரு துரும்பையும் கிள்ளிப் போட்டவர்கள் அல்ல. இன்னும் சொல்லப் போனால், அதை கெடுக்க இயன்ற அனைத்தையும் செய்தவர்கள்.

இப்போதும் மொழிவழி மாநிலங்கள் என்பது இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரானது அல்ல. அந்த உயரிய கோட்பாட்டிற்கு உரம் சேர்ப்பது. கூட்டாட்சி க்கு வழிவகுப்பது. ஆனால், ஆளுநர் ரவி வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், மொழி வழி மாநிலங்கள் என்ற கோட்பாட்டிற்கு எதிராக விஷம் கக்கி வருகிறார். இந்தியா முழுவதும் கடவுள்கள் ஒன்றாகவே இருப்பதாக கயிறு திரிக்கிறார் ஆளுநர். ஆனால் இவர் பிறந்த பீகாரில் தான் சமண, புத்த மதங்கள் உருவாகின. புத்த மதத்தின் ‘விஹார்’ என்பதிலிருந்துதான் பிஹார் என்றே சொல்லே உருவானது. அங்குதான் நாளந்தா பல்கலைக்கழகம் இருந்தது. ஆனால் இதை யெல்லாம் மறைத்துவிட்டு ஒரே நாடு, ஒரே மதம் என்ற ஆர்.எஸ்.எஸ். குரலை அப்படியே மிமிக்ரி செய்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

தமிழ்நாட்டில் தெலுங்கு மொழி பேசுகிறவர்களும், ஆந்திராவில் தமிழ் மொழி பேசுகிறவர்களும் ஒன்றுபட்டே வாழ்கின்றனர். இவர்தான் குட்டையைக் குழப்பி ஒற்றுமையை சீர்குலைக்கிறார்.

தெலுங்கானா மாநிலம் உருவான நாளில் அந்த மாநிலத்தில் நடத்தப்பட்ட விழாவில், ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் அழைக்கப்படவில்லை. அந்த அளவிற்கு மாநில அரசோடு முரண்பட்டு நிற்கிறார் அவர். இவரோ, தமிழ்நாட்டில் இருந்து கொண்டு ஒவ்வொரு நாளும் மாநில உரிமைகளுக்கு எதிராகவும் உணர்வுகளுக்கு எதிராகவும் பேசி கலகம் செய்ய நினைக்கிறார். அதன் ஒரு பகுதியே, ஊட்டியில் இவர் நடத்தும் துணை வேந்தர்களின் போட்டி மாநாடு. இவருடைய உள்ளம் முழுவதும் பொங்கி வழிவது ஆர்.எஸ்.எஸ். சிந்தனையே. இவர், அந்த அமைப்பில் சேர்ந்து அவர்களது கருத்தை பேசட்டும். இல்லையேல், ஆளுநர் வேலையை மட்டும் பார்க்கட்டும்.

நன்றி : ‘தீக்கதிர்’ 06.06.2023